SG Courts

# போதைப்பொருள் தண்டனைகளைப் புரிந்துகொள்வது

போதைப்பொருள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ்ப் பின்வரும் குற்றங்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டனைகளை இந்த ஆவணம் சுருக்கமாக விவரிக்கிறது:

(அ) போதைப்பொருட்களைத் தன் வசம் வைத்திருத்தல்,
(ஆ) போதைப்பொருட்களை உட்கொள்ளுதல் மற்றும்
(இ) போதைப்பொருட்களைக் கடத்துவது, இறக்குமதி/ஏற்றுமதி செய்வது, மற்றும் தகுந்த தண்டனையைத் தீர்மானிக்கும்போது நீதிமன்றம் கருத்தில் கொள்ளும் சில முக்கியக் காரணிகள்.



# 1. அறிமுகம்

## போதைப்பொருள் ஒழிப்புச் சட்டம் 1973

போதைப்பொருள் ஒழிப்புச் சட்டம் 1973 (MDA), போதைப்பொருள் குற்றங்களை நிர்வகிக்கும் முதன்மை சட்டமாகும். சட்டவிரோத போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்கள் தொடர்பான பின்வரும் செயல்களைக் குற்றமாக்குவதன் மூலம், தவறான போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் பொறுத்துக்கொள்ளாத சிங்கப்பூரின் ஒரு கடுமையான அணுகுமுறை கொள்கையை இச்சட்டம் பிரதிபலிக்கிறது:


தன் வசம் வைத்திருப்பது


உட்கொள்வது


கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

## சட்டவிரோத போதைப்பொருட்கள் மற்றும் கேடு விளைவிக்கக்கூடிய பொருட்களின் வகைகள்

MDA-யால் முறைப்படுத்தப்படும் போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்கள்* மூன்று பரந்த பிரிவுகளில் அடங்கும்:

### "கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்கள்

இவை அனைத்தும் MDA-யின் முதலாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள போதைப்பொருட்களாகும். இவை வகுப்பு "A", "B" மற்றும் "C" பிரிவுகளுக்குள் வகைப்படுத்தப்பட்டு, "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்களோடு மற்ற போதைப்பொருட்களையும் உள்ளடக்கும்.

**உதாரணம்:**

கோடீன் ("கட்டுப்படுத்தப்பட்டது", ஆனால் "குறிப்பிடப்பட்டது" அல்ல)

### "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்கள்

இவை அனைத்தும் MDA-யின் நான்காம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள போதைப்பொருட்களாகும். இவைக் "கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்களின் உட்பிரிவு மற்றும் அதிகரிக்கப்பட்ட தண்டனைகளை ஈர்க்கலாம்.

**உதாரணங்கள்:**
கெனபிஸ் ("வீட்", "மாரியுவானா", அல்லது "பொட்" என்றும் அறியப்படுவது), கொகேன் ("கிராக்" அல்லது "கொக்" என்றும் அறியப்படுவது), MDMA, MDEA மற்றும் MDA ("எக்ஸ்டஸி" என்றும் அறியப்படுவது), டயமார்ஃபின் ("ஹெரௌயின்" "வைட்", "ஸ்மேக்" அல்லது "பூத்தே" என்றும் அறியப்படுவது), மெத்தம்பேட்டமின் ("ஐஸ்" என்றும் அறியப்படுவது), கெட்டமின், மார்ஃபின், நிமிதாசெபம்

### மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருட்கள்

இவை, உட்கொண்டால் ஒருவருக்கு "மனநிலை மாற்றங்களை" விளைவிக்கும் பொருட்களாகும். ஊக்கமூட்டும் அல்லது சோர்வாக்கும் தன்மை ஒருவரின் மூளை அல்லது நரம்பு மண்டலத்தைப் பாதித்து ஒரு நபர் எவ்வாறு சிந்திக்கிறார், உணர்கிறார், அல்லது நடந்து கொள்கிறார் என்பதில் மாற்றம் செய்ய முடிந்தால், அது "மனநிலை மாற்றங்களை" விளைவிக்கக்கூடிய பொருளாகும்.

**விதிவிலக்குகள்:**
ஐந்தாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் (எ.டு. மது மற்றும் கேஃபீன்) "மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடியவை" என்றாலும் இப்பிரிவிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

**மேலே பட்டியலிடப்பட்டுள்ள போதைப்பொருட்கள் முழுமையானவை அல்ல. முழுப் பட்டியலுக்கு MDA-வைக் காணவும்.*

**பொறுப்புத் துறப்பு அறிவிக்கை**

இந்த ஆவணம் சட்ட ஆலோசனையாக **கருதப்படக்கூடாது**. போதைப்பொருள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருள் தொடர்பான குற்றங்களை நிர்வகிக்கும் குற்றவியல் சட்டம் மற்றும் செயல்முறை குறித்து உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து சுயேச்சைச் சட்ட அல்லது நிபுணத்துவ ஆலோசனையை நாடவும். இந்த ஆவணத்தில் அடங்கியுள்ள தகவல்கள் 18 மே 2026 தேதிப்படி சரியானவை.

# 2. தன் வசம் வைத்திருத்தல்

## தண்டனைகள் மற்றும் தண்டனை விதிப்பு - தன் வசம் வைத்திருந்த குற்றம்

சட்டவிரோத போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களைத் தன் வசம் வைத்திருந்ததற்கான தண்டனையின் தீவிரம் முதன்மையாக கீழ் வருபவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது:

### 1 MDA-யின் கீழ்ப் போதைப்பொருள் வகையின் வகைப்பாடு

தீவிரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில்:

- "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்கள் (குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்கு)
- A வகுப்பு
- B வகுப்பு
- C வகுப்பு

“கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்களை விட, "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்களே, குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்குக் கூடுதல் தண்டனையை ஈர்க்கலாம்.

### 2 ஒரே வகை குற்றங்கள் தொடர்பான குற்றவியல் வரலாறு

- அதிகரிக்கப்பட்ட தண்டனைகள்
- கட்டாய குறைந்தபட்சத் தண்டனைகள் (சிறைத் தண்டனை, பிரம்படி மற்றும்/அல்லது அபராதம்)

### 3 அளவு (போதைப்பொருளின்)

- அதிகமான அளவுகள் (எடையின்படி) வழக்கமாக கூடுதல் கடுமையான தண்டனைகளை ஈர்க்கும்
- குறிப்பிட்ட எடை வரம்புகள் கட்டாய குறைந்தபட்சத் தண்டனைகளைச் (சிறைத் தண்டனை, பிரம்படி மற்றும்/அல்லது அபராதம்) விதிக்கத் தூண்டும்

**! முக்கிய குறிப்பு**

இவைத் தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகளாகும், மேலும், இவைத் தீவிரத்தின்படி வரிசைப்படுத்தப்படவில்லை. தகுந்த தண்டனையைத் தீர்மானிப்பதில், ஒவ்வொரு வழக்கின் அனைத்துச் சூழ்நிலைகளையும் நீதிமன்றம் ஆழ்ந்து ஆராயும். தண்டனை வரம்புகள் பற்றிய கூடுதல் தகவலுக்குத், தயவுசெய்து அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

# 2. தன் வசம் வைத்திருத்தல்

## வரையறுக்கப்பட்ட தண்டனைகள் - தன் வசம் வைத்திருந்த குற்றம்

இந்த அட்டவணை பின்வரும் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது: (1) போதைப்பொருட்களின் வகை; (2) குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள்; மற்றும் (3) குற்றவாளியின் குற்றத்தீர்ப்பு வரலாறு.

| போதைப்பொருள் வகை | தன் வசம் வைத்திருந்த அளவு (கிராம்) | | |
|---|---|---|---|
| கெனபிஸ் (மாரியுவானா, வீட், பொட், கிராஸ், ட்ஜய்ன்ட்ஸ், கஞ்சா என்றும் அறியப்படுவது) | < 330 | 330 - 500 | > 500 |
| கெனபிஸ் கலவை (மாரியுவானா, வீட், பொட், கிராஸ், ட்ஜய்ன்ட்ஸ், கஞ்சா என்றும் அறியப்படுவது) | < 660 | 660 - 1,000 | > 1,000 |
| கெனபிஸ் பிசின் (ஹேஷீஸ் என்றும் அறியப்படுவது) | < 130 | 130 - 200 | > 200 |
| கொகேன் (கிராக், கொக், ஸ்னௌ என்றும் அறியப்படுவது) | < 20 | 20 - 30 | > 30 |
| டயாமார்ஃபின் (ஹெரௌயின், பெஹ் ஹூன், வைட், ஸ்மேக், ஜங்க், பவுடர், பூத்தே, மெடிசின், உபாட் என்றும் அறியப்படுவது) | < 10 | 10 - 15 | > 15 |
| மெத்தம்பேட்டமின் (ஐஸ், கிலாஸ், கிரிஸ்டல், ஸ்பீட், ஐஸ்கிரீம், கிரீம், ஹிரோபோன், யாபா, ஷாபு, ஷியாபு என்றும் அறியப்படுவது) | < 167 | 167 - 250 | > 250 |
| மார்ஃபின் உள்ளடக்கிய போதைப்பொருட்கள் (ஓப்பியம் தவிர) | < 20 | 20 - 30 | > 30 |
| ஓப்பியம் | < 800 | 800 - 1,200 **மற்றும்** ≥ 20 கிராம் மார்ஃபின் உள்ளடக்கியது | > 1,200 **மற்றும்** > 30 கிராம் மார்ஃபின் உள்ளடக்கியது |
| வேறு ஏதேனும் கட்டுப்படுத்தப்பட்ட போதைப் பொருட்கள் / மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருட்கள் | ஏதேனும் அளவு | - | |

| | முதல் முறைக் குற்றம் | அடுத்தடுத்த குற்றம்/கள் | முதல் முறை மற்றும் அனைத்து அடுத்தடுத்த குற்றங்கள் | |
|---|---|---|---|---|
| தண்டனை | • 10-ஆண்டு காலம் வரை சிறைத் தண்டனை மற்றும்/அல்லது<br>• S$20,000 வரை அபராதம் | • **குறைந்தபட்சம்:** 2-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• **அதிகபட்சம்:** 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• விதிக்கப்படக்கூடிய அபராதம்: S$20,000 வரை | •**குறைந்தபட்சம்:** 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 5 பிரம்படிகள்*<br>•**அதிகபட்சம்:** 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 10 பிரம்படிகள்* | •**குறைந்தபட்சம்:** 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 10 பிரம்படிகள்*<br>•**அதிகபட்சம்:** •30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 15 பிரம்படிகள்* |

** கீழ்க்காணும் "பிரம்படி தொடர்பான பரிசீலனைகள்" தலைப்பிட்ட பிரிவைப் பார்க்கவும்.*

### முக்கிய குறிப்பு

ஒவ்வொரு வழக்கின் உண்மை விவரங்களின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த தண்டனையை முடிவு செய்கிறது. அதே போன்ற மற்ற வழக்குகளில் விதிக்கப்பட்ட தண்டனைகளையும் நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. விதிக்கப்படவுள்ள தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகள் கீழ்க்காணும் "மிகைப்படுத்தும்/தணிக்கும் காரணிகள்" பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

# 3. உட்கொள்ளுதல்

## தண்டனைகள் மற்றும் தண்டனை விதிப்பு - உட்கொண்ட குற்றம்

சட்டவிரோத போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களை **உட்கொண்டதற்கான** தண்டனைகளின் தீவிரம் முதன்மையாக கீழ் வருபவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது:

### 1 MDA-யின் கீழ்ப் போதைப்பொருள் வகையின் வகைப்பாடு

தீவிரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில்:

- "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்கள் (குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்கு)
- A வகுப்பு
- B வகுப்பு
- C வகுப்பு

“கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்களை விட, "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்களே, குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்குக் கூடுதல் தண்டனையை ஈர்க்கலாம்.

### 2 ஒரே வகை குற்றங்கள் தொடர்பான குற்றவியல் வரலாறு

- முதல் முறை போதைப்பொருள் உட்கொள்பவர்
- அவ்வப்போது உட்கொள்பவர்
- அடிமையானவர்
- முந்தைய குற்றத்தீர்ப்புகள் (அதிகரிக்கப்பட்ட தண்டனைகள்)

முந்தைய குற்றத்தீர்ப்புகள் கட்டாய குறைந்தபட்சத் தண்டனைகளைச் (சிறைத் தண்டனை, பிரம்படி மற்றும்/அல்லது அபராதம்) விதிக்க தூண்டலாம்.

### 3 குற்றத்தின் சூழ்நிலைகள்

உதாரணத்திற்கு:

- போதைப்பொருளை உட்கொண்டது திட்டமிடப்பட்டதா
- போதைப்பொருட்களுக்குக் கட்டணம் செலுத்தப்பட்டதா

### 4 குற்றம் புரிந்தவரின் வயது

**! முக்கிய குறிப்பு**

இவைத் தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகளாகும்; மேலும், இவைத் தீவிரத்தின்படி வரிசைப்படுத்தப்படவில்லை. தகுந்த தண்டனையைத் தீர்மானிப்பதில், ஒவ்வொரு வழக்கின் அனைத்துச் சூழ்நிலைகளையும் நீதிமன்றம் ஆழ்ந்து ஆராயும். தண்டனை வரம்புகள் பற்றிய கூடுதல் தகவலுக்குத், தயவுசெய்து அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

# 3. உட்கொள்ளுதல்

## வரையறுக்கப்பட்ட தண்டனைகள் - உட்கொண்ட குற்றம்

இந்த அட்டவணை பின்வரும் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது: (1) உட்கொண்ட போதைப்பொருள்/ கேடுவிளைவிக்கக்கூடிய பொருளின் வகை மற்றும் (2) போதைப்பொருள் தொடர்பான முந்தைய குற்றத்தீர்ப்புகளின் எண்ணிக்கை. காணப்படுவதுபோல், வரையறுக்கப்பட்ட தண்டனைகள் பொதுவாக ஒவ்வொரு அடுத்தடுத்த குற்றத்தீர்ப்புடன் அதிகரிக்கும்.

<table>
<tr><th colspan="2">போதைப்பொருள் வகை</th><th>"கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருள்</th><th>"குறிப்பிடப்பட்ட" போதைப்பொருள்</th><th>மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருட்கள்</th></tr>
<tr><td rowspan="4">தண்டனை</td><td>முதல் முறைக் குற்றவாளி</td><td colspan="2">• குறைந்தபட்சம்: 1-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• அதிகபட்சம்: 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• விதிக்கப்படக்கூடிய அபராதம்: S$20,000 வரை</td><td>• அபராதம்: அதிகபட்சம் S$20,000 வரை மற்றும்/அல்லது<br>• அதிகபட்சம்: 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை</td></tr>
<tr><td>இரண்டாம் முறைக் குற்றவாளி</td><td colspan="2">• குறைந்தபட்சம்: 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை</td><td rowspan="3">• குறைந்தபட்சம்: 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>• அதிகபட்சம்: 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை</td></tr>
<tr><td>மூன்றாம் முறைக் குற்றவாளி</td><td rowspan="2">• குறைந்தபட்சம்: 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை</td><td>நீண்டகாலச் சிறைத் தண்டனை 1 (LT1)<br><br>• குறைந்தபட்சம்: 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 3 பிரம்படிகள்*<br><br>• அதிகபட்சம்: 7-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 6 பிரம்படிகள்*</td></tr>
<tr><td>நான்காம் முறைக் குற்றவாளி<br><br>(முந்தைய LT1-யுடன்)</td><td>நீண்டகாலச் சிறைத் தண்டனை 2 (LT2)<br><br>• குறைந்தபட்சம்: 7-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 6 பிரம்படிகள்*<br><br>• அதிகபட்சம்: 13-ஆண்டு காலச் சிறைத் தண்டனை மற்றும் 12 பிரம்படிகள்*</td></tr>
</table>

**கீழ்க்காணும் "பிரம்படி தொடர்பான பரிசீலனைகள்" தலைப்பிட்ட பிரிவைப் பார்க்கவும்.*

### ! முக்கிய குறிப்பு

ஒவ்வொரு வழக்கின் உண்மை விவரங்களின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த தண்டனையை முடிவு செய்கிறது. அதே போன்ற மற்ற வழக்குகளில் விதிக்கப்பட்ட தண்டனைகளையும் நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. விதிக்கப்படவுள்ள தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகள் கீழ்க்காணும் "மிகைப்படுத்தும்/தணிக்கும் காரணிகள்" பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஒரு முதல் முறைக் குற்றவாளிக்கும் தொடர் குற்றவாளிக்கும் இடையிலான வித்தியாசத்தைத் தீர்மானிக்க, தயவுசெய்து அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையைக் காணவும்.

# 3. உட்கொள்ளுதல்

## விளக்கம்

முதல் முறை மற்றும் தொடர் குற்றவாளிகளுக்கு இடையிலான விளக்கம் கீழ்ப் பட்டியலிடப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| முதல் முறைக் குற்றவாளி | • MDA அல்லது சிங்கப்பூர் ஆயுதப் படைச் சட்டம் 1972 (SAFA)*-யின் கீழ்க் கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருள்/ மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருள் உட்கொண்டதற்கான முந்தைய குற்றத்தீர்ப்பு எதுவும் இல்லை. |
| இரண்டாம் முறைக் குற்றவாளி | • MDA அல்லது SAFA-யின் கீழ்க் கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருள்/ மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருள் உட்கொண்டதற்கான ஒரு முந்தைய குற்றத்தீர்ப்பு;<br><br>• MDA-யின் கீழ்ப் போதையர் மறுவாழ்வு நிலையம் ஒன்றில் ஒரு முந்தைய சேர்க்கை; அல்லது<br><br>• சம்பந்தப்பட்ட ஆணையங்களிடம் சிறுநீர்/முடி மாதிரி ஒன்றை வழங்கத் தவறிய குற்றத்திற்கான ஒரு முந்தைய குற்றத்தீர்ப்பு. |
| மூன்றாம் முறைக் குற்றவாளி | • MDA-யின் கீழ்ப் போதையர் மறுவாழ்வு நிலையம் ஒன்றில் 2 முந்தைய சேர்க்கைகள்;<br><br>• குறிப்பிடப்பட்ட போதைப்பொருள் ஒன்றை உட்கொண்டதற்கான 2 முந்தைய குற்றத்தீர்ப்புகள்;<br><br>• சம்பந்தப்பட்ட ஆணையங்களிடம் சிறுநீர்/முடி மாதிரி ஒன்றை வழங்கத் தவறிய குற்றத்திற்கான 2 முந்தைய குற்றத்தீர்ப்புகள்;<br><br>• 1 முந்தைய சேர்க்கை மற்றும் குறிப்பிடப்பட்ட போதைப்பொருள் ஒன்றை உட்கொண்டதற்கான 1 முந்தைய குற்றத்தீர்ப்பு;<br><br>• 1 முந்தைய சேர்க்கை மற்றும் சம்பந்தப்பட்ட ஆணையங்களிடம் சிறுநீர்/முடி மாதிரி ஒன்றை வழங்கத் தவறிய குற்றத்திற்கான 1 முந்தைய குற்றத்தீர்ப்பு; அல்லது<br><br>• குறிப்பிடப்பட்ட போதைப்பொருள் ஒன்றை உட்கொண்டதற்கான 1 முந்தைய குற்றத்தீர்ப்பு மற்றும் சம்பந்தப்பட்ட ஆணையங்களிடம் சிறுநீர்/முடி மாதிரியை வழங்கத் தவறிய குற்றத்திற்கான 1 முந்தைய குற்றத்தீர்ப்பு. |
| முந்தைய LT1 குற்றத்தீர்ப்புடைய குற்றவாளி | • குறிப்பிடப்பட்ட போதைப்பொருளை உட்கொண்டதற்கான அல்லது சம்பந்தப்பட்ட ஆணையங்களிடம் சிறுநீர்/முடி மாதிரியை வழங்கத் தவறிய குற்றத்திற்கான முந்தைய LT1 குற்றத்தீர்ப்பு. |

*SAFA என்பது இராணுவ சட்டத்திற்கு உட்பட்ட நபர்களுக்கு மட்டுமே பொருந்தும், எ.டு. முழு நேர தேசிய சேவையாளர்கள், முழு நேர படைவீரர்கள் மற்றும் வேறு ஏதேனும் இராணுவ பணியாளர்கள்*

# 4. கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

## தண்டனைகள் மற்றும் தண்டனை விதிப்பு - கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி குற்றங்கள்

MDA-யால் முறைப்படுத்தப்பட்ட போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்கள் ஆகியவற்றைக் கடத்துவது, இறக்குமதி, அல்லது ஏற்றுமதி செய்வது ஒரு குற்றமாகும். “கடத்தல்" என்பதில் போதைப்பொருட்களை விற்பது, கொடுப்பது, ஒருவருக்குச் செலுத்துவது, இடத்துக்கு இடம் கொண்டு செல்வது, அனுப்பி வைப்பது, ஒப்படைப்பது மற்றும் விநியோகம் செய்வது (அல்லது அவ்வாறு செய்ய முன்வருவது) ஆகியவை அடங்கும்.

சட்டவிரோத போதைப்பொருட்கள் மற்றும் கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களைக் **கடத்துவது/ இறக்குமதி/ ஏற்றுமதி** செய்வது ஆகியவற்றிற்கு வழங்கப்படும் தண்டனையின் தீவிரம் முதன்மையாக கீழ் வருபவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது:

### 1 MDA-யின் கீழ்ப் போதைப்பொருள் வகையின் வகைப்பாடு

தீவிரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில்:

- “குறிப்பிடப்பட்ட” போதைப்பொருட்கள் (குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்கு)
- A வகுப்பு
- B வகுப்பு
- C வகுப்பு

“கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்களை விட, "குறிப்பிடப்பட்ட" போதைப்பொருட்களே, குறிப்பாகத் தொடர் குற்றவாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட தண்டனையை ஈர்க்கலாம்.

### 2 போதைப்பொருளைப் பெற்றுக்கொள்ள இருந்த உத்தேச பெறுநர்

போதைப்பொருட்கள்:

- இளையவர் (21 வயதுக்குக் கீழுள்ளவர்) அல்லது
- எளிதில் பாதிப்படையக்கூடிய நபர் (தீவிரமான மனநல கோளாறால் துன்பப்படுபவர்) போன்றவர்களுக்கு வழங்கப்பட இருந்ததா என்பது

### 3 ஒரே வகை குற்றங்கள் தொடர்பான குற்றவியல் வரலாறு

### 4 சம்பந்தப்பட்ட (போதைப்பொருளின்) அளவு

**! முக்கிய குறிப்பு**

இவை தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகளாகும்; மேலும், இவைத் தீவிரத்தின்படி வரிசைப்படுத்தப்படவில்லை. தகுந்த தண்டனையைத் தீர்மானிப்பதில், ஒவ்வொரு வழக்கின் அனைத்துச் சூழ்நிலைகளையும் நீதிமன்றம் ஆழ்ந்து ஆராயும். தண்டனை வரம்புகள் பற்றிய கூடுதல் தகவலுக்குத், தயவுசெய்து அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

# 4. கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

## வரையறுக்கப்பட்ட தண்டனைகள் - கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி குற்றங்கள்

### "குறிப்பிடப்பட்ட" மற்றும் "கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்களுக்கு

<table>
<tr><th colspan="2">போதைப்பொருள் வகை</th><th colspan="3">கடத்தப்பட்ட அல்லது இறக்குமதி/ ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (கிராம்)</th></tr>
<tr><td colspan="2">கெனபிஸ் (மாரியுவானா, வீட், பொட், கிராஸ், ட்ஜய்ன்ட்ஸ், கஞ்சா என்றும் அறியப்படுவது)</td><td>< 330</td><td>330 – 500</td><td>> 500</td></tr>
<tr><td colspan="2">கெனபிஸ் கலவை (மாரியுவானா, வீட், பொட், கிராஸ், ட்ஜய்ன்ட்ஸ், கஞ்சா என்றும் அறியப்படுவது)</td><td>< 660</td><td>660 – 1,000</td><td>> 1,000</td></tr>
<tr><td colspan="2">கெனபிஸ் பிசின் (ஹேஷீஸ் என்றும் அறியப்படுவது)</td><td>< 130</td><td>130 – 200</td><td>> 200</td></tr>
<tr><td colspan="2">கொகேன் (கிராக், கொக், ஸ்னௌ என்றும் அறியப்படுவது)</td><td>< 20</td><td>20 – 30</td><td>> 30</td></tr>
<tr><td colspan="2">டயாமார்ஃபின் (ஹெரொஇன், பெஹ் ஹூன், வைட், ஸ்மேக், ஜங்க், பவுடர், பூத்தே, மெடிசின், உபாட் என்றும் அறியப்படுவது)</td><td>< 10</td><td>10 – 15</td><td>> 15</td></tr>
<tr><td colspan="2">மெத்தம்பேட்டமின் (ஐஸ், கிலாஸ், கிரிஸ்டல், ஸ்பீட், ஐஸ்கிரீம், கிரீம், ஹிரோபோன், யாபா, ஷாபு, ஷியாபு என்றும் அறியப்படுவது)</td><td>< 167</td><td>167 – 250</td><td>> 250</td></tr>
<tr><td colspan="2">மார்ஃபின் உள்ளடக்கிய போதைப்பொருட்கள் (ஓப்பியம் தவிர)</td><td>< 20</td><td>20 – 30</td><td>> 30</td></tr>
<tr><td colspan="2">ஓப்பியம்</td><td>< 800</td><td>800 – 1,200 மற்றும் ≥ 20 கிராம் மார்ஃபின் உள்ளடக்கியது</td><td>> 1,200 மற்றும் >30 கிராம் மார்ஃபின் உள்ளடக்கியது</td></tr>
<tr><td rowspan="4">தண்டனை</td><td>முதல் முறைக் குற்றம் (கடத்தல்)</td><td>குறைந்தபட்சம்:<br>• 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>அதிகபட்சம்:<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்*</td><td rowspan="4">குறைந்தபட்சம்:<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்*<br><br>அதிகபட்சம்:<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை<br>• 15 பிரம்படிகள்*</td><td rowspan="4">மரண தண்டனை (MDA பிரிவு 33B-க்கு உட்பட்டது)</td></tr>
<tr><td>முதல் முறைக் குற்றம் (இறக்குமதி/ ஏற்றுமதி)</td><td>குறைந்தபட்சம்:<br>• 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>அதிகபட்சம்:<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை<br>• 15 பிரம்படிகள்*</td></tr>
<tr><td>அடுத்தடுத்த குற்றம்(கள்) (கடத்தல்/இறக்குமதி/ ஏற்றுமதி) குறிப்பு:<br><br>முந்தைய குற்றத்தீர்ப்பு அதே போதைப்பொருள் அல்லது கேடுவிளைவிக்கக்கூடிய பொருளுக்காக இருக்க வேண்டிய அவசியமில்லை)</td><td rowspan="2">குறைந்தபட்சம்:<br>• 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 10 பிரம்படிகள்*<br><br>அதிகபட்சம்:<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்*</td></tr>
<tr><td>ஓர் இளையவர் அல்லது எளிதில் பாதிப்படையக்கூடியவர் ஆகியோருக்காக போதைப்பொருட்கள்/ கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களைக் கடத்துதல்/ இறக்குமதி செய்தல்/ ஏற்றுமதி செய்தல்</td></tr>
</table>

*கீழ்க்காணும் "பிரம்படி தொடர்பான பரிசீலனைகள்" தலைப்பிட்ட பிரிவைப் பார்க்கவும்.*

# 4. கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

## வேறு ஏதேனும் கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருட்கள்/மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருட்கள்

| போதைப்பொருள் வகை | | தண்டனை | | | |
|---|---|---|---|---|---|
| | | முதல் முறைக் குற்றம் (கடத்தல்) | முதல் முறைக் குற்றம் (இறக்குமதி/ ஏற்றுமதி) | அடுத்தடுத்த குற்றம்(கள்) (கடத்தல்/ இறக்குமதி/ ஏற்றுமதி)<br><br>*குறிப்பு: முந்தைய குற்றத்தீர்ப்பு அதே போதைப்பொருள் அல்லது கேடுவிளைவிக்கக் கூடிய பொருளுக்காக வழங்கப்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை* | ஓர் இளையவர் அல்லது எளிதில் பாதிப்படையக் கூடியவர் ஆகியோருக்காக போதைப் பொருட்கள்/ கேடுவிளைவிக்கக் கூடிய பொருட்களைக் கடத்துதல்/ இறக்குமதி செய்தல்/ ஏற்றுமதி செய்தல் |
| வேறு எந்தவொரு "கட்டுப்படுத்தப்பட்ட" போதைப்பொருட்கள் | A வகுப்பு போதைப் பொருள் | **குறைந்தபட்சம்:**<br>• 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை **அல்லது** ஆயுள் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 10- ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 10 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | |
| | B வகுப்பு போதைப் பொருள் | **குறைந்தபட்சம்:**<br>• 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 3 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 10 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 5-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை **அல்லது** ஆயுள் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 6-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 6 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 30-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | |
| | C வகுப்பு போதைப் பொருள் | **குறைந்தபட்சம்:**<br>• 2-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 2 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 5 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | **குறைந்தபட்சம்:**<br>• 4-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 4 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* | |
| மனநிலை மாற்றங்களை விளைவிக்கக்கூடிய பொருட்கள் | | **குறைந்தபட்சம்:**<br>• 2-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**அதிகபட்சம்:**<br>• 10-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**விதிக்கப்படக்கூடிய அபராதம்:**<br>• S$4,000 முதல் S$10,000 வரை | **குறைந்தபட்சம்:**<br>• 3-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**விதிக்கப்படக்கூடிய அபராதம்:**<br>• S$6,000 முதல் S$20,000 வரை | **குறைந்தபட்சம்:**<br>• 4-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br><br>**விதிக்கப்படக்கூடிய அபராதம்:**<br>• S$8,000 முதல் S$20,000 வரை | **குறைந்தபட்சம்:**<br>• 4-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 4 பிரம்படிகள்*<br><br>**அதிகபட்சம்:**<br>• 20-ஆண்டு காலச் சிறைத் தண்டனை<br>• 15 பிரம்படிகள்* |

**கீழ்க்காணும் "பிரம்படி தொடர்பான பரிசீலனைகள்" தலைப்பிட்ட பிரிவைப் பார்க்கவும்.*

# 4. கடத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

## நீதிமன்றம் தகுந்த தண்டனையை எவ்வாறு தீர்மானிக்கிறது

தகுந்த தண்டனை வரம்பை அடையாளங்கண்டப் பிறகு, தண்டனைக்கான தொடக்க புள்ளியை நிர்ணயிக்க நீதிமன்றம் சம்பந்தப்பட்ட போதைப்பொருட்களின்/ கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களின் **அளவைக்** கருத்தில் எடுத்துக்கொள்கிறது. அதன் பிறகு, பின்வருபவனவற்றை அடிப்படையாகக் கொண்டு, நீதிமன்றம் தொடக்க தண்டனையை மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி சரி செய்யலாம்:

- **குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றப் பொறுப்பு**

  இது பொதுவாக குற்றவாளி அந்த குற்றத்திற்கு எந்த அளவிற்குப் பொறுப்பானவர் என்பதைக் குறிக்கிறது.

**குற்றப்பொறுப்பை அதிகரிக்கக்கூடிய காரணிகள் (கூடுதல் பொறுப்பேற்பு):**

- ஒரு பெரிய அளவிலான போதைப்பொருள் நடவடிக்கைக்குத் தலைமை வகிப்பது/ஏற்பாடு செய்வது.
- அழுத்தம் கொடுத்தோ அல்லது சன்மானம் வழங்கியோ மற்றவர்களை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவது.
- குற்றத்திற்காக பிடிபடுவதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுப்பது.

**குற்றப்பொறுப்பைக் குறைக்கக்கூடிய காரணிகள் (குறைந்த பொறுப்பேற்பு):**

- வேறொருவரின் கட்டளையின் கீழ்க் குற்றத்தில் ஒரு சிறிய பகுதியில் மட்டுமே ஈடுபட்டிருப்பது.
- குற்றத்தைச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டு, ஏமாற்றப்பட்டு அல்லது அழுத்தம் கொடுக்கப்பட்டு மற்றும்/அல்லது என்ன நடக்கிறது என்பதைச் சரியாக புரிந்துகொள்ளாமல் இருப்பது.

- **மிகைப்படுத்தும் அல்லது தணிக்கும் காரணிகள் இடம்பெற்றிருப்பது**

  மிகைப்படுத்தும் காரணிகள் என்பவைக் குற்றத்தை மேலும் கடுமையாக்கும் விஷயங்களாகும்.

  தணிக்கும் காரணிகள் என்பவைத் தண்டனையைக் குறைக்க உதவும் விஷயங்களாகும்.

**முக்கிய குறிப்பு**

ஒவ்வொரு வழக்கின் உண்மை விவரங்களின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த தண்டனையை முடிவு செய்கிறது. இதேபோன்ற மற்ற வழக்குகளில் விதிக்கப்பட்ட தண்டனைகளையும் நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. விதிக்கப்படவுள்ள தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான காரணிகள், கீழ்க்காணும் "மிகைப்படுத்தும்/தணிக்கும் காரணிகள்" தலைப்பிட்ட பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

# 5. மிகைப்படுத்தும் / தணிக்கும் காரணிகள்

தகுந்த தண்டனையைப் பாதிக்கக்கூடிய சில பொதுவான, ஆனால் முழுமையற்ற காரணிகள் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன:

### மிகைப்படுத்தும் காரணிகள் (குற்றத்தை மேலும் கடுமையாக்கக் கூடியவை):

- போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான குற்றவியல் வரலாறைக் கொண்டிருப்பது.
- தண்டனை விதிப்பிற்காக அதே போன்ற குற்றச்சாட்டுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்வது.
- பிணையில் (Bail) இருக்கும்போது அல்லது போதைப்பொருள் மறுவாழ்வு / இடைக்கால இல்ல (halfway house) திட்டத்தின் போது குற்றத்தைச் செய்வது.
- குற்றத்திற்கான ஆதாரங்களை மறைக்க அல்லது அழிக்க முயற்சிப்பது.
- பலதரப்பட்ட போதைப்பொருட்களைக் கையாள்வது.

### தணிக்கும் காரணிகள் (தண்டனையைக் குறைக்கக்கூடியவை):

- குற்றத்தைத் தானாக முன் வந்து ஒப்புக்கொள்வது.
- குற்றத்தை ஒப்புக்கொள்வது (எவ்வளவு விரைவாக செய்யப்படுகிறதோ அவ்வளவு நல்லது).
- புலனாய்வு அதிகாரிகளுக்குப் பெருமளவு உதவி வழங்குவது.
- குற்றச்செயலுக்கு வழிவகுத்த மோசமான மனநலப் பாதிப்பைக் கொண்டிருப்பது.
- வலுவான மறுவாழ்வு வாய்ப்புகளைக் கொண்ட இளம் குற்றவாளி.

### முக்கிய குறிப்பு

தணிக்கும் காரணிகள் இருந்தாலும், சட்டத்தால் வரையறுக்கப்பட்ட கட்டாய குறைந்தபட்சத் தண்டனைக்கும் (சிறைத் தண்டனை, பிரம்படி மற்றும்/அல்லது அபராதம்) குறைவாக நீதிமன்றத்தால் தண்டனை **வழங்க முடியாது**.

# 6. பிரம்படி தொடர்பான பரிசீலனைகள்

பின்வரும் நபர்கள் பிரம்படியிலிருந்து **விலக்களிக்கப்படுகின்றனர்**:



**பெண் குற்றவாளிகள்**



**பிரம்படி நிறைவேற்றப்படும் சமயத்தில் 50 வயதைத் தாண்டியிருக்கும் ஆண் குற்றவாளிகள்**



**மரண தண்டனை விதிக்கப்பட்டு அத்தண்டனை குறைக்கப்படாத ஆண் குற்றவாளிகள்**

### முக்கிய குறிப்பு

- எனினும், பிரம்படிக்குப் பதிலாக 12 மாதங்களுக்கு மேற்போகாத சிறைத் தண்டனையை நீதிமன்றம் விதிக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
- 16 வயதிற்கும் கீழுள்ள இளம் குற்றவாளிகளுக்கு, உயர் நீதிமன்றம் மட்டுமே பிரம்படி விதிக்க முடியும்.

# 7. இளம் குற்றவாளிகள்



## இளம் குற்றவாளிகளுக்கு மாற்று தண்டனைத் தெரிவுகள்

வலுவான மறுவாழ்வுக்கான திறனை வெளிப்படுத்தும் 21 வயதிற்குக் கீழுள்ள குற்றவாளிகளுக்கு, வழக்கின் உண்மை விவரங்களைப் பொறுத்து, நீதிமன்றம் சிறைவாசம் அனுபவிக்க தேவையில்லாத இதுபோன்ற இலகுவான தண்டனையை விதிக்கலாம்:

## நன்னடத்தைக் கண்காணிப்பு

பொதுவாக, குற்றவாளியைக் கண்காணிப்பின் கீழ்ச் சமூகத்தில் தொடர்ந்திருக்க அனுமதிக்கிறது; சாதாரணமாக 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரையிலான கால அளவைக் கொண்டிருக்கும்.

குற்றவாளி பின் வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்:

- நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரியுடன் சீரான இடைவெளிகளில் சந்திப்புகளை மேற்கொள்வது
- நேரத்தடைக்கு இணங்குவது
- சமூகச் சேவை செய்வது
- ஆலோசனை அல்லது மறுவாழ்வுத் திட்டங்களில் கலந்துகொள்வது
- அங்கீகரிக்கப்பட்ட இல்லம் ஒன்றில் தங்கியிருப்பது (குறிப்பிடப்பட்ட காலத்திற்கு)






## சீர்திருத்தப் பயிற்சி

நன்னடத்தைக் கண்காணிப்பை விடக் கடுமையான தண்டனை வகை - கூடுதல் கட்டமைப்புடையது மற்றும் குற்றவாளி ஒரு சீர்திருத்தப் பயிற்சி மையத்தில் **குறைந்தபட்சம்** 6 அல்லது 12 மாதக் **காலத்திற்கு** (நீதிமன்றம் உத்தரவிடும்) மறுவாழ்விற்காக தடுத்து வைக்கப்படவேண்டும்.

தடுப்புக்காவலுக்குப் பிறகு, அதிகபட்சம் 54 மாதங்கள் வரை நீடிக்கும் ஒரு மேற்பார்வைக் காலம் இருக்கும்.

**இத்தண்டனைகள் பற்றிய கூடுதல் தகவல்களை**
https://www.judiciary.gov.sg/criminal/types-sentences
**என்ற இணையத்தளத்தில் காணலாம்.**

SG Courts

Tel: 6 JUSTICE (65878423)

www.judiciary.gov.sg